மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 120, திரு. ஆ. சுப்புரத்தினம். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

120—

பழனி தொகுதியில் மகளிர் கிராமிய நூற்பு மையம் ஏற்படுத்துதல்

*11775—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக பழனி தொகுதியில் மகளிருக்கென கிராமிய நூற்பு மையம் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ் நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் எல்லாம் அரசியலை கைப்பற்றி ஆண்டால் மாதிலத்தில் சாக்காடும் இல்லை, போரும் இல்லை என்ற புரட்சிக் கவிஞர் பாரதி தாசனுடைய கவிதை வரிகளை நினைவுபடுத்தி, அந்த வரி களுக்கு இணங்க இன்றைக்கு அரசியலை கைப்பற்றி தமிழ கத்தை அமைதிப் பூங்காவாக மாற்றி, நல்லாட்சி (மேசையைத் தட்டும் ஒலி) நடத்தி வரக்கூடிய இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மகளிர்க்கு என பல்வேறு சிறப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையிலே இந்தத் திட்டத்தை என்னுடைய தொகுதியான பழனி தொகுதியிலே உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப் பார்களா, முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பொற்கால ஆட்சியை நடத்திவரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்

தலைவி அவர்களுடைய சிறப்பான ஆட்சியில் பழனி தொகுதியிலே பாலசமுத்திரம், பெரிய கடையன்புதூர், நரிக்கன்பட்டி ஆகிய 3 கிராமங்களிலும் நூற்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதில் பணிபுரியும் அனைவருமே பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, தற்போது இடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராமிய நூற்பு மையங்களில் பணிபுரியக்கூடிய மகளிர்க்கு மாதச் சம்பளமாக எவ்வளவு வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பு நிலையங்களில் பணிபுரிந்து வரும் தாய்மார்கள் தினக் கூலிகளாகவே பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 8 முதல் 12 வரை தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

101—

அரசு ஊழியர் முழு ஓய்வூதியம் பெறுவதற்கான பணிபுரியும் ஆண்டுகளைக் குறைத்தல்.

*14751—திரு. எ. தெய்வநாயகம், திரு. பி.ஆர். எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர் 33 ஆண்டுகள் பணிசெய்த பின் முழு ஓய்வு ஊதியம் அளிப்பதற்கு பதிலாக 25 ஆண்டுகள் பணிபுரிந்தாலே முழு ஓய்வூதியம் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?